R 5437 (page 110)

# இராஜ்யத்தின் ஆசீர்வாதம் ஒலிவமலை

## THE MOUNT OF OLIVES THE KINGDOM OF BLESSING

"திறவுகோல் வசனம் : சகரியா 14:4
"அந்நாளில் அவருடைய பாதங்கள் எருசலேமுக்குக்
கிழக்கே உள்ள ஒலிவமலையின்மேல் நிற்கும்;அப்போது
ஒலிவமலை கிழக்கு மேற்காய்ச்செல்லும் மிகப்பெரும் பள்ளத்தாக்கு ஒன்றில் இரண்டாகப் பிரிக்கப்படும். ஆகவே, அம்மலையின் ஒரு பகுதி வடக்கு நோக்கியும், மற்றொரு பகுதி தெற்கு நோக்கியும் விலகி நிற்கும்"

உபத்திரவ நாளின் முடிவினையும், அந்த உபத்திரவத்தோடு தொடர்புடைய தேவனுடைய வல்லமை வெளிப்படுவதையும் இந்த ஆதார வசனம் குறிப்பிடுகிறது. ஒலிவமலை நேரடி அர்த்தத்தில் இப்பொழுதும், அநேகமாக பின்னரும் இவ்விஷயத்தில் ஏதாவதொருவிதத்தில் சம்பந்தப்பட்டுள்ளது. இது ஒரு மாபெரும் பூமிஅதிர்ச்சியை சந்திக்கப்போவதாக இங்கு குறிப்பிடப்படுகிறது. அந்நேரத்தில், எருசலேமில், இஸ்ரயேலர்கள் கூட்டி சேர்க்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை, அங்கே அவர்களுக்கு கர்த்தருடைய தயவு வெளிப்படுத்தப்படும் என்பதிலும் சந்தேகமில்லை. "யாக்கோபின் இக்கட்டுக்காலத்தின்" முடிவில் இது நடைபெறும். அங்கே கர்த்தர் பிரசன்னமாகியிருந்து, அவர்களை அதிலிருந்து மீட்பார். சபை மகிமைக்குள் கடந்துசென்றபிறகே இது நடைபெறும் என்பது நம் கருத்தாக உள்ளது. இங்கு விளக்கப்பட்டுள்ளதன் நிறைவேறுதலானது மகிமையடைந்த சபையின் பணிகளுள் ஒரு பகுதியாக இருக்கும் என தோற்றமளிக்கிறது.

அப்பொழுது முற்பிதாக்கள் காணப்படுவர், தேவதயவு யூதர்களுக்கு திரும்பியிருக்கும் என்று நாம் புரிந்துகொள்கிறோம். இஸ்ரயேலரின் பூமிக்குரிய ஆசீர்வாதங்களும் அங்கே துவங்கும். யூதர்கள் அப்போது, புதிய உடன்படிக்கைக்குரிய ஏற்பாட்டின் கீழிருப்பதை இது குறிப்பாக சுட்டிக்காட்டுவதால், சபை முழுமையடைந்திருக்கும் என்பது உறுதியாகிறது.

உருவகமாக, ஒரு மலை என்பது இராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. யேகோவா தேவன் தம் பாத ஸ்தானத்தை மகிமைப்படுத்துவார் என்று வேதவசனங்கள் மற்ற இடங்களில் அறிவிக்கின்றன. கீழ்த்திசை நாட்டு ஜனங்களின் சிந்தையில், ஒலிவம் என்பது வெளிச்சம் மற்றும் ஆகாரத்தோடு தொடர்புடைய கருத்தாக எப்பொழுதும் இருந்துவருகிறது. வெண்ணெய்க்கு பதிலாக ஒலிவ எண்ணெயை அவர்கள் வழக்கமாக உபயோகிக்கிறார்கள். ஒலிவம், வெளிச்சம் மற்றும் ஆகாரத்தைத் தருவதால், ஒலிவமலை தேவராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. ஒலிவ எண்ணெய் யூத ராஜாக்கள் மற்றும் ஆசாரியர்களது தலையின்மீது ஊற்றப்படுவது, பரிசுத்தஆவியை அடையாளப்படுத்துகிறது. மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்காகவே தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. இந்த இராஜ்யம், பரத்துக்குரியதும், பூமிக்குரியதுமாக இரண்டு பாகங்களக இருக்கும். அதனுடைய ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமையின்கீழ், முடிவில் எல்லா ஜனங்களும் வந்து சேர்வார்கள்.

-------------------------